திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலே சிறுவர் பேருந்துகளை விட்டதைப்போல, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களிலே, அங்கும் பக்கத்திலேயிருக்கிற சிறுவர்கள் வருவதற்கு பேருந்துகள் விட தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னையைப்போன்ற நெரிசல் நேரங்கள் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் ஏற்பட வில்லை. ஆகையினால் இந்தப் பிரச்சினை இன்னும் அங்கு எழ வில்லை.

பேராசிரியர்கள் சம்பள விகிதம்

* 43 வினா—*திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கல்லூரிகளில் ஆங்கில, தமிழ் பேராசிரியர்களுக்கு சம்பள விகிதம் ஒரே அளவுக்கு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether the scales of pay paid to the Professors and Lectures in Tamil and English are also paid to the Professors and Lecturers in minority languages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, எல்லா மொழியைச் சேர்ந்த பேராசிரியர்களுக்கும் ஒரே விகிதமான சம்பளம்தான் தரப்படுகிறது.

மாயூரம் ஒன்றியப் பகுதியில் உயர்நிலைப்பள்ளிகள்

* 44 வினா—*திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ஜனத் தொகைக்கு போதுமான உயர்நிலைப் பள்ளிகள் தற்போது திறக்கப் பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?